சிறப்பு விளையாட்டு விடுதிகளில் மாணவ - மாணவியர் சேர்க்கை!

தர்மபுரி மாவட்ட கலெக்டர் சதீஷ் தகவல்!!

தர்மபுரி, மார்ச் 19

தர்மபுரி மாவட்ட கலெக்டர் சதீஷ் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:2026–2027 –ம் ஆண்டுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மாணவ மாணவிகளுக்கான சேர்க்கைக்கு 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். 01.07.2001 அன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராகவும், 01.07.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவராகவும் இருக்க வேண்டும். 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் மாணவ/மாணவியர்கள் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுவர்.தேசிய, மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முதுநிலை பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு படிப்பில் சேர்வதற்காக இளநிலை பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும்.

இளநிலைப் படிப்பின் போது சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவி

யர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவ – மாணவியர்கள், சிறப்பு விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான ஆன்லைன்விண்ணப்பப் படிவத்தினை 13.03.2026 முதல் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன்விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க கடைசி நாள்: 26.03.2026 அன்று மாலை 5.00 மணி ஆகும். ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் தகவல்களுக்கு ஆடுகள தகவல் தொடர்பு மைய அலைப்பேசி 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ, மாணவியருக்கான மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் 30.03.2026 அன்று காலை 7.00 மணிக்கு கீழ்கண்ட இடங்களில் நடைபெறவுள்ள தேர்வு போட்டிகளில் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஊத்தங்கரை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ரமலான் பண்டிகையையொட்டி தாளாளர் சக்திவேல் தலைமையில் மதநல்லிணக்க விழா நடந்தது.

ஊத்தங்கரை பள்ளியில் மத நல்லிணக்க விழா!

ஊத்தங்கரை மார்ச்:19

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மத நல்லிணக்கத்தை வற்புறுத்தும் பொருட்டும், எம்மதமும் சம்மதமே என்ற எண்ணத்திலும் ரமலான் பெருவிழா கொண்டாடப்பட்டது.

இதில் பள்ளியின் தாளாளர் செ.சக்திவேல் தலைமையேற்று தொடக்க உரை நிகழ்த்தி விழாவினை துவக்கி வைத்தார்.

விழாவின் சிறப்பு விருந்தினர்களாக வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியின் (தன்னாட்சி) தமிழ்த்துறைத் தலைவர் மு.முஜிபுர் ரகுமான் காரப்பட்டு கிரசன்ட் பள்ளியின்நிறுவனர்நூருல்லா ஷரிப்,ஊத்தங்கரை இஸ்லாமிய நல அறக்கட்டளையின் செயலாளர் உள்ளிட்டோர் பாபு அப்துல் சையத் கலந்துகொண்டு ரமலான் நோன்பின் சிறப்புகள் மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கினர். மேலும் இதில் பள்ளியின் நிர்வாகிகள், முதல்வர்கள், துணை முதல்வர், இருபால் ஆசிரியர்கள், மாணவ–மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். இறுதியில் அனைவருக்கும் ரமலான் நோன்பு கஞ்சி வழங்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி அருகே

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நூற்றாண்டு விழா!

கள்ளக்குறிச்சி,மார்ச்.19

கள்ளக்குறிச்சி அருகே மோ.வன்னஞ்சூர் கிராமத்தில் பள்ளி ஆரம்பித்து நூறு ஆண்டுகள் ஆகின்றது அதனைஒட்டி பள்ளியில் முன்னாள் மாணவர்களைஅழைத்து கௌரவித்து சால்வை அணிவித்தனர். 1926 ஆம் ஆண்டு இப்பள்ளி ஒன்றிய தொடக்க பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டது இப்பள்ளியில் பல்லாயிரம் கணக்கான மாணவ மாணவிகள் பயின்று பல அரசு துறைகளில் சாதனை படைத்துள்ளனர் இப்பள்ளியின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு முன்னாள் மாணவர்கள் சிறப்புரையாற்றினர். விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் ராசு தலைமை தாங்கினார்

பள்ளியின் தலைமை ஆசிரியர் சுசீலா அனைவரும் வரவேற்றார்.

மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் பாலமுருகன் வட்டார கல்வி அலுவலர் ராதாகிருஷ்ணன் வட்டார கல்வியாளர் சுபத்ரா பள்ளியின் மேலாண்மை குழு தலைவர் திருமங்கைபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் ஆண்டு அறிக்கையை உதவி ஆசிரியர் தமிழ்ச் செல்வி வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக வட்டார வளமைய மேற்பார்வையாளர் வெங்கடேசன்.ஆசிரியர் பயிற்றுநர் சிவக்குமார் ஒன்றிய குழு உறுப்பினர் அரவிந்தன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலியன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் செல்வராஜ் மாலைமுரசு மாவட்ட நிருபர் அப்பள்ளியின் முன்னாள் மாணவர் குமரவேல்ஜெகதீசன்சுகுணா கோவிந்தராஜுலு ஆழ்வார்சுமதிசெந்தில்குமார் அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அப்பள்ளியின் மூத்த மாணவராக 1948 இல் பயின்ற 3 முன்னாள் மாணவர்களுக்கு சால்வையா அணிவித்து மரியாதை செலுத்தினர். விழாவில் பள்ளியின் இடைநிலை ஆசிரியர் அந்தோணி நன்றியுரை தெரிவித்தார். விழாவில் கலை நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனைத்து மாணவ – மாணவிகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி அருகே மோ.வன்னஞ்சூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நூற்றாண்டு விழா ஊராட்சி மன்ற தலைவர் ராசு தலைமையில் நடந்தது.

டாரஸ் லாரியின் பின்புறம் மீது மோதி சேதமடைந்த தனியார் பஸ்.

நல்லம்பள்ளி அருகே

டாரஸ் லாரியின் பின்புறம் பஸ் மோதி 12 பேர் காயம்!

நல்லம்பள்ளி;மார்ச்19

தர்மபுரி பகுதியில் இருந்து பயணிகளை ஏற்றிய தனியார் பேருந்து ஒன்று சேலத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. நல்லம்பள்ளி அடுத்துள்ள கெங்களாபுரம் பகுதியில் தர்மபுரி–சேலம் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் மீது அந்த பஸ் அதிவேகமாகச்சென்றுகொண்டிருந்தது.

அப்போது முன்னால் சென்று கொண்டிருந்த டாரஸ் லாரியின் பின்னால் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் தனியார் பேருந்தில் இடது பக்கம் பலத்த சேதம் அடைந்த நிலையில் முன்பக்கத்தில் அமர்ந்திருந்த 2 பெண்கள் படுகாயம் அடைந்தநிலையில் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். அருகில் இருந்தவர்கள் உடனடியாக வந்து விபத்தில் சிக்கிய பெண்களை பத்திரமாக மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் காயமடைந்த 10க்கு மேற்பட்டோர் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கும், தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து தொப்பூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கரியாலூர் கோடை விழா திடலில் அரசியல் தலைவர்கள் உருவப்படங்கள் அகற்றம்!

கள்ளக்குறிச்சி,மார்ச்.19

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதிக்கு உட்பட்ட கரியாலூர் கோடை விழா திடலில் அகற்றப்படாமல் இருந்த அரசியல் தலைவர்களின் உருவப்படங்கள் அதிகாரிகளின் நேரடி கண்காணிப்பில் அகற்றப்பட்டன.

கோடை விழா நடைபெறும் திடலில் உயரமான கட்டமைப்பில் அமைக்கப்பட்டிருந்த இந்த அரசியல் தலைவர்களின் படங்கள், பொதுமக்கள் மற்றும் சில அமைப்புகளின் எதிர்ப்பையும் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அரசு நிகழ்வுகள் நடைபெறும் பொதுத் தளங்களில் அரசியல் சார்ந்த விளம்பரங்கள் இருக்கக்கூடாது என்ற விதிமுறைகள் உள்ள நிலையில், அவை அகற்றப்படாமல் இருந்தது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் சட்டமன்ற தேர்தலையொட்டி கல்வராயன் மலை வட்டாட்சியர் கோவிந்தராஜ், கிராம நிர்வாக அலுவலர் ராஜகோபால், மற்றும் கரியாலூர் காவல் நிலைய ஆய்வாளர் பாலமுரளி ஆகியோர் திடலை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் உடனடியாக, அங்கு இருந்த அனைத்து அரசியல் தலைவர்களின் உருவப்படங்களையும் அகற்ற உத்தரவிட்டனர். அதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மூலம் அந்த உருவப்படங்கள் அகற்றப்பட்டன.

பென்னாகரம் அருகே

ரூ 2 லட்சத்து 31 ஆயிரம், வெள்ளி பொருட்கள் பறிமுதல்!

தேர்தல் பறக்கும்படை அதிரடி!!

பென்னாகரம், மார்ச்.19

பென்னாகரம் அருகே இரண்டு இடங்களில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ 2 லட்சத்து 31 ஆயிரத்து 150 பணம் மற்றும் 706 கிராம் வெள்ளி பொருட்கள் தேர்தல் நிலையான பறக்கும் படை குழுவினர் மூலமாக பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலையொட்டி பறக்கும் படை குழுவினர் நிலையான பறக்கும் படை குழுவினர் அமைக்கப்பட்டு தீவிர வாகன சோதனை நடைபெற்று வருகிறது. இந்தக் குழுவில் அதிகாரிகள் போலீசார் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர் .

இந்த பறக்கும் படையினர் ஆங்காங்கே வாகனங்களை நிறுத்தி சோதனை யிடுகிறார்கள் . உரிய ஆவணங்கள் இல்லாமல் 50 ஆயிரத்திற்கும் மேல் கொண்டு செல்லப்படும் பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் .

இதேபோல் தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் ஆலம்பாடி சோதனைச் சாவடியில் தேர்தல் நிலையான பறக்கும் படை வன அலுவலர் சிவரஞ்சனி தலையிலான குழுவினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த வந்த தர்மபுரி கே.வி ரத்தினம் தெருவை சேர்ந்த குணசேகரன் என்பவர் உரிய ஆவணங்கள் இன்றி ரூ 1 லட்சத்து 62ஆயிரத்து 800 பணம்

மற்றும் 706 கிராம் வெள்ளி பொருட்கள் வைத்திருந்தது தெரியவந்தது . உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுவரப்பட்ட அந்த

பணம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

அதேபோல் நாகதாசம்பட்டி பிரிவு சாலையில் மற்றொரு தேர்தல் நிலையான பறக்கும் படை குழுவினர் மூலம் வாகன தணிக்கையில் ஈடுபட்டபோது கூத்தப்பாடி கிராமத்தைச் சேர்ந்த பாலாஜி என்பவர் காரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுவரப்பட்ட 68 ஆயித்து350 பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இரு வேறு இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட ரூபாய் 2 லட்சத்து 31 ஆயித்து 350 பணம் மற்றும் 706 கிராம் வெள்ளி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு தேர்தல் நடத்தும் அலுவலர் பாபு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆறுமுகம் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தேசிய திறனாய்வு தேர்வு:

சிடுவம்பட்டி அரசு பள்ளி மாணவி தேர்வு!

பென்னாகரம், மார்ச்.19

தமிழகம் முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் தேதி நடைபெற்ற 8ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கான தேசிய வருவாய் வழி மற்றும் திறனாய்வு தேர்வு நடைபெற்றது.

இதற்கான தேர்வு முடிவுகள் பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி வெளியிடப்பட்டது . மதிப்பெண்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் தரவரிசையில் பட்டியல் வெளியிடப்பட்டது . இதில் தர்மபுரி மாவட்டம் ஏரியூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சிடுவம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளி எட்டாம் வகுப்பு மாணவி வி.பிரதிக்ஷா உதவித்தொகை பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளனர் இந்த மாணவிக்கு ஒன்பதாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாதம் தோறும் ஆயிரம் என மொத்தமாக 48 ஆயிரம் அரசின்சார்பில் உதவியாக உதவித்தொகையாக வழங்கப்படும். உதவித் தொகை பெறதகுதி பெற்ற மாணவர்களை பள்ளியின் தலைமை ஆசிரியர் கண்மலர் மற்றும் ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மை குழு வினர், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பொதுமக்கள் பாராட்டினர்.

எடப்பாடி பகுதியில்

இரவு முதல் விடிய, விடிய கொட்டித்தீர்த்த கனமழை!

எடப்பாடி,மார்ச்.19

சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம் கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கச்சுப்பள்ளி ஊராட்சியில் மழை பெய்யும் பொழுதெல்லாம் தாழ்வான பகுதியில் உள்ள பள்ளி மற்றும் குடியிருப்புகளைமழைநீர்தேங்குவது தொடர்கதையாக இருந்து வருகிறது. மழைநீர் தேங்காதவாறு மழை நீர் கால்வாய் அமைத்து தண்ணீரை வெளியேற்றக் கோரி அப்பகுதி பொதுமக்கள் பலமுறை அரசு அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று இரவு எடப்பாடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் இரவு முதல் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கச்சுப்பள்ளி செல்லியம்மன்கோயில் முதல் கச்சுப்பள்ளி ஊர் வரை சுமார் ஒரு மீட்டர் உயரத்துக்கு மழை நீர் தேங்கியுள்ளது. இந்த மழை நீர் தேங்கியதால் வீடுகள் விவசாய நிலங்கள் கச்சுப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் வீடுகளைசுற்றி மழைநீர் சூழ்ந்துள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள வாழைத்தோட்டங்கள் ,விவசாய நிலங்களில் நீர் வெள்ளமாக தேங்கி நின்றது.

மழைநீர்சூழ்ந்துள்ளதால் பொதுமக்களும் பள்ளி மாணவ மாணவிகளும் கடும் பாதிப்படைந்துள்ளனர்.போர்கால அடிப்படையில் கால்வாய் அமைத்து தேங்கிய மழைநீரை வெளியேற்றவேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : பேலகொண்டபள்ளி கிராமம், தளி ரோடு, தேன்கனிக்கோட்டை, பேலகொண்டபள்ளி - 635 114, (தமிழ்நாடு)
போன் : +91 04347 233509, பேக்ஸ் : + 91 04347 233414 E-mail : secretarial@taal.co.in,
Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

தபால் வாக்குப்பதிவிற்கான அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013-இன் பிரிவு 110-உடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014-இன் விதி 22 மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள, அவ்வப்போது திருத்தப்பட்ட சட்டத்தின் பிற பொருந்தக்கூடிய விதிகளின்படியும், மேலும், 2020 ஏப்ரல் 13 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 17/2020-உடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய, 2020 ஏப்ரல் 8 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 14/2020-இன் விதிமுறைகளின்படியும், உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. நிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தால் ("MCA Circulars") முறையே வெளியிடப்பட்ட, 15 ஜூன் 2020 தேதியிட்ட எண் 22/2020, 28 செப்டம்பர் 2020 தேதியிட்ட எண் 33/2020, 31 டிசம்பர் 2020 தேதியிட்ட எண் 39/2020, 23 ஜூன் 2021 தேதியிட்ட எண் 10/2021, 8 டிசம்பர் 2021 தேதியிட்ட எண் 20/2021, 5 மே 2022 தேதியிட்ட எண் 3/2022, 28 டிசம்பர் 2022 தேதியிட்ட எண் 11/2022, 25 செப்டம்பர் 2023 தேதியிட்ட எண் 09/2023, 19 செப்டம்பர் 2024 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 09/2024 மற்றும் 22 செப்டம்பர் 2025 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 03/2025 ஆகியவற்றின் தொடர்ச்சியாக, நிறுவனம் தனது தபால் வாக்குப்பதிவு அறிவிப்பை புதன்கிழமை, 18 மார்ச் 2026 அன்று மின்னஞ்சல் வாயிலாக அனைத்துப் பங்குதாரர்களுக்கும் அனுப்பி வைக்கும் பணியை நிறைவு செய்துள்ளது. அதாவது, கட்-ஆஃப் தேதியான 13 மார்ச் 2026 நிலவரப்படி தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் இது அனுப்பப்பட்டுள்ளது. 18 மார்ச் 2026 தேதியிட்ட தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தீர்மானம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, மின்னணு வழிமுறைகள் மூலம் வாக்களிப்பதன் வாயிலாக உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவதே இதன் நோக்கமாகும்:

1. திரு. அனில் குமார் சாஹு (DIN: 09038050) அவர்களை ஒரு 'சுயாதீன இயக்குநராக' நியமித்தல்.
2. செல்வி. தீபா மாத்தூர் (DIN: 00449912) அவர்களை ஒரு 'பெண் சுயாதீன இயக்குநராக' நியமித்தல்.

நிறுவனங்கள் சட்டம், 2013-இன் பிரிவு 108-இன் தொடர்ச்சியாகவும், நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014-இன் விதி 20 மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறைகளுடன் இணைத்து வாசிக்கப்படுவதன் அடிப்படையிலும்... SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015-இன் விதி 44 மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக, நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு (e-voting) வசதியை வழங்க, 'National Securities Depositary Limited' ("NSDL")-இன் சேவைகளை நிறுவனம் பெற்றுள்ளது. NSDL-இன் மின்னணு வாக்குப்பதிவு தளம் வாயிலாக, https://www.evoting.nsdl.com என்ற இணைப்பின் மூலம் இந்த வசதி வழங்கப்படுகிறது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (Remote e-voting) வசதியானது, வெள்ளிக்கிழமை, மார்ச் 20, 2026 அன்று காலை 9:00 மணி முதல் (இந்திய நேரப்படி), சனிக்கிழமை, ஏப்ரல் 18, 2026 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி) செயல்பாட்டில் இருக்கும். அதன் பிறகு, NSDL-ஆல் இந்த மின்னணு வாக்குப்பதிவு வசதி முடக்கப்படும். MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தபால் வாக்குச்சீட்டு அறிவிப்புகள் மற்றும் தபால் வாக்குச்சீட்டு படிவங்களின் அச்சுப் பிரதிகள் (physical copies) நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். எனவே, உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதலையோ அல்லது மறுப்பையோ தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி வாயிலாக மட்டுமே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆகவே, தங்கள் மின்னஞ்சல் முகவரியை இதுவரை பதிவு செய்யாத பங்குதாரர்கள், மேற்கூறிய அஞ்சல் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி, தங்கள் மின்னஞ்சல் முகவரியைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கட்-ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, மார்ச் 13, 2026 அன்று, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேட்டிலோ அல்லது வைப்பகங்களால் (Depositories) பராமரிக்கப்படும் பயனாளி உரிமையாளர்கள் பதிவேட்டிலோ எவருடைய பெயர்கள் இடம்பெற்றுள்ளனவோ, அந்த உறுப்பினர்கள் மட்டுமே மின்னணு வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்குகளைச் செலுத்தத் தகுதி பெறுவர். ஒரு தீர்மானத்தின் மீதான வாக்கு ஒருமுறை பதிவு செய்யப்பட்ட பிறகு, அந்த வாக்கை மாற்றியமைக்கப் பங்குதாரருக்குப் பின்னர் அனுமதி அளிக்கப்படாது. கட்-ஆப் தேதியின்படி நிறுவனத்தின் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள், இந்த அறிவிப்பைத் தகவலுக்காக மட்டுமே வழங்கப்பட்டதாகக் கருத வேண்டும்.

அஞ்சல் வாக்குச்சீட்டு வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக, விதிஷாவைச் சேர்ந்த, தொழில்முறை நிறுவனச் செயலாளரான திரு. அனுஜ் நேமா ACS அவர்கள் ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தபால் வாக்குச்சீட்டு மற்றும் மின்னணு வாக்குப்பதிவின் (e-voting) முடிவுகள், மின்னணு வாக்குப்பதிவு தளம் மூடப்பட்டதிலிருந்து 2 பணி நாட்களுக்குள், அதாவது ஏப்ரல் 21, 2026 அன்று அல்லது அதற்கு முன்னதாக அறிவிக்கப்படும். இந்த முடிவுகள் BSE லிமிடெட் (BSE)-க்குத் தெரிவிக்கப்படுவதுடன், நிறுவனத்தின் இணையதளமான www.taal.co.in மற்றும் NSDL-இன் இணையதளமான https://www.evoting.nsdl.com ஆகியவற்றிலும் பதிவேற்றப்படும்.

நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனம் அல்லது வைப்பகத்தில் (Depository) பதிவு செய்யவில்லை என்றால், மின்னணு வாக்குப்பதிவிற்கான உள்நுழைவு விவரங்களைப் பெறுவதற்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

I. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கு போலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன்பக்கம் மற்றும் பின்பக்கம்), PAN (PAN அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் நகல்), AADHAR (Aadhar அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் நகல்) போன்ற தேவையான விவரங்களை, நிறுவனம் அல்லது RTA-வின் மின்னஞ்சல் முகவரிகளான sandeep@bigshareonline.com / secretarial@taal.co.in ஆகியவற்றிற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவும்.

II. டீமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கு - உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்ணை, உங்கள் தொடர்புடைய வைப்பகப் பங்கேற்பாளரிடம் (Depository Participant - DP) புதுப்பித்துக்கொள்ளவும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (Remote e-Voting) தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது குறைகள் இருப்பின், www.evoting.nsdl.com என்ற இணையதளத்தின்பதிவிறக்கம் பிரிவில் கிடைக்கும், பங்குதாரர்களுக்கான 'அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்' (FAQs) மற்றும் 'மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேடு' ஆகியவற்றை நீங்கள் பார்வையிடலாம்; அல்லது 022 - 4886 7000 என்ற எண்ணை அழைக்கலாம் அல்லது evoting@nsdl.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் எழுதலாம்.

அஞ்சல் வாக்குச்சீட்டு தொடர்பான அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளமான www.taal.co.in-இலும், NSDL-இன் இணையதளமான https://www.evoting.nsdl.com-இலும், மற்றும் BSE Limited-இன் இணையதளமான www.bseindia.com-இலும் கிடைக்கிறது.

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்
அஸ்வினி நவரே
நிறுவன செயலாளர்

தேதி : 19.03.2026
இடம் : பூனே